**செய்தி வெளியீடு எண்: 736** **நாள்: 12.10.2018**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டு 2.9.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கேபிள் டிவி சேவைகள் தமிழ்நாடு முழுவதும் துவக்கி வைக்கப்பட்டது. 1.9.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விலையில்லா செட்டாப் பாக்ஸ் வழங்கி டிஜிட்டல் கேபிள் டிவி சேவையினை துவக்கி வைத்தார்கள்.

மேலும், உயர்தரத்திலான அதி துல்லியமான எச்.டி. கேபிள் டிவி சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2.7.2018 அன்று துவக்கி வைத்தார்கள்.

தற்போது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 205 சேனல்கள் கொண்ட தொகுப்பினை ரூ.125/- (வரிகள் தனி) என்ற மாத சந்தாகட்டணத்திலும், 287 சேனல்கள் கொண்ட தொகுப்பினை ரூ.175/- (வரிகள் தனி) என்ற மாத சந்தாகட்டணத்திலும் மற்றும் 407 சேனல்களைக் கொண்ட எச்.டி. தொகுப்பினை ரூ.225/- (வரிகள் தனி) என்ற மாத சந்தாகட்டணத்திலும் வழங்கி வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட மொழி பேசும் வாடிக்கையாளர்கள் தேவையினை கருத்தில் கொண்டு, அவர்களது தாய்மொழியில் ஒளிபரப்பப்படும் டிவி சேனல்களை கண்டுகளித்திட தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் என மூன்று தனித்தனி சேனல் தொகுப்புகளை இன்று (12.10.2018) மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இதன் மூலம் தெலுங்கு சேனல் தொகுப்பில் 223 சேனல்களும் கன்னட சேனல் தொகுப்பில் 223 சேனல்களும் மலையாள சேனல் தொகுப்பில் 223 சேனல்களும் ரூ.175/- (வரிகள் தனி) என்ற மாத சந்தாக் கட்டணத்தில் வழங்கப்படும். இந்த சந்தாக்கட்டணத்தில் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு ரூ.100/-ம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு ரூ.75/-ம் பங்கீடு செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன் அவர்கள், தகவல் தொழில் நுட்பவியல் துறை அரசு செயலாளர் டாக்டர் சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஏ. ஜான் லூயிஸ், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**